# செவ்வியல் இலக்கியங்களில் இன்பவியல் கோட்பாடுகள்
# Theories of Hedonism in Classical Literature

**முனைவர் ச. லெனின்குமார்**, உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, பெரியார் மணியம்மை பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

**Dr S. Leninkumar**, Assistant Professor, Periyar Maniammai University, Thanjavur.

**DOI : 10.5281/zenodo.7567955**

**Abstract**

Literature is beneficial for the prosperity and stability of human life. They contribute to the cultural prosperity and civilizational development of the country. Sangam literature is the herald of people's cultural heritage of love, virtue, justice, romance, pleasure and valor. There are more songs about love and pleasure in it. The hedonistic elements are very much present in the internal life in which both the leader and the female participate heavily. This article is based on the principle of hedonistic theories in classical literature with the aim of highlighting the ideas related to hedonism found in classical literature.

**ஆய்வுச் சுருக்கம்**

மானுட வாழ்வின் செழுமைக்கும், உறுதிக்கும் நன்மை பயப்பனவாய்த் திகழ்வன இலக்கியங்கள். அவை நாட்டின் பண்பாட்டுச் செழுமைக்கும், நாகரிக வளர்ச்சிக்கும் உறுதுணையாய் இருக்கின்றன. சங்க இலக்கியங்கள் மக்களின் அன்பு, அறம், நீதி, காதல், இன்பம், வீரம் எனும் பண்பாட்டுப் பெட்டகத்தைப் பறைசாற்றுபவனாகத் திகழ்கின்றன. இதில் காதல், இன்பம் குறித்த பாடல்கள் அதிகமாகக் காணப்படுகின்றன. தலைவனும், தலைவியும் பெரிதும் பங்குபெறும் அகவாழ்வியலில் இன்பவியல் கூறுகள் மிகுந்து காணப்படுகின்றன. செவ்வியல் இலக்கியங்களில் காணலாகும் இன்பவியல் சார்ந்த கருத்துக்களை எடுத்துரைக்கும் நோக்கில் செவ்வியல் இலக்கியங்களில் இன்பவியல் கோட்பாடுகள் என்னும் பொருண்மையில் இக்கட்டுரை அமைகிறது.

**அகவாழ்வியலும் - இன்பவியலும்**

அகப்பொருள், புறப்பொருள் என இரண்டுவகையிலும் காதல் உணர்வு மனிதர்களின் வாழ்வியலில் வெளிப்படும் இயல்பான இயற்கை உணர்வு ஆகும். உயிரின் இயற்கைப் பண்பு குறித்து தொல்காப்பியர்,

**“எல்லா உயிர்க்கும் இன்பம் என்பது**

**தான மர்ந்து வரும் மேவற் றாகும்” (தொல். பொருள். பொருளியல், 1168)**

என்கிறார். இன்பம் என்பது தானாக வரக்கூடிய ஓர் உணர்வாக எடுத்துரைக்கிறார். துன்பம் என்பது செயற்கையானது என்பதை மறைமுகப் பொருளாக்குகிறார்.

போர் என்பது உணர்வு வகையில் ஒன்றிப் போகாது. போர், போரினால் கிடைக்கும் வெற்றி இன்பத்தையும் தோல்வி, துன்பத்தையும் கொடுக்கிறது. ஆனால் காதல் உணர்வு, உயிரினங்கள் அனைத்திற்கும் உள்ள இயல்புணர்வாக உள்ளது. காதலில் தோல்வியடைந்து துன்பத்திற்குள்ளாகும் சங்கப்பாடல்கள் காணப்படவில்லை.

மனித வாழ்வில் மனிதனை இயல்பாக வைத்திருக்கும் உணர்வுகளில் தலையாயது இன்பநாட்டம். இவ்வுணர்வு ஆண், பெண் இருவருக்கும் ஏற்படக் கூடிய இயற்கைப்பண்பாகும். எதிர் பாலினத்தின் மீதான இயற்கையான உணர்வு, இணைந்து இருப்பதனால் ஏற்படக்கூடிய மகிழ்ச்சி குறித்து எடுத்துரைப்பது அகவாழ்க்கை. இவ்வின்பத்தை மனிதனது தனிமையினால் பெறமுடியாது என்பதை, "வாழ்க்கை மலர் சொரிகின்ற இன்பத்தேனே, மனிதனது தனிமையினால் பெறுவதில்லை" என்கிறார் பாரதிதாசன்.

காதல் என்பது மனத்தளவில் உய்த்துணரக்கூடிய உணர்வு. உள்ளம் நுகரும் பொருள். உணர்ந்தவர் கூற இயலாத தன்மை கொண்டது. உணர்ந்தவரேயன்றிப் பிறர் அறிய இயலாதது. மனம் உணரும் அனைத்து வகை உணர்வுகளையும் அகம் எனக் குறிப்பிடுதல் முறை எனினும் இளமைப்பருவத்தில் தலைவன், தலைவியர் துய்க்கும் காதல் ஒழுக்கம் அகத்திணை என அழைக்கப்பெறுகிறது. தலைவன், தலைவியரின் காதல் மன உணர்வுகளும் அவ்வுணர்வுகளுக்குத் துணைநிற்கும் பிற அகமாந்தர்களின் உரையாடல்களும் இன்பவியலுக்கு ஏற்றதாக அமைகிறது. அனைத்துணர்வுகளும், செயல்களும் அக ஈடுபாட்டினை அடிப்படையாகக் கொண்டு அமைகின்றன.

அகப்பாடல்கள் அன்பின் முதிர்ச்சியாகிய காதல் பாடல்கள், உலகக் காதலர் அனைவருக்கும் உரியவை. ஒரு தனிப்பட்ட இனத்திற்கோ, மொழியினர்க்கோ கூறப்பெற்றவை அல்ல.

**"யாயும் ஞாயும் யாரா கியரோ**
**எந்தையும் நுந்தையும் எம்முறைக் கேளிர்?**
**யானும் நீயும் எவ்வழி அறிதும்?**
**செம்புலப் பெயல்நீர் போல**
**அன்புடை நெஞ்சம் தாம்கலந் தனவே" (குறுந்தொகை, 40)**

என்ற பாடல், செம்மண் நிலத்தில் பெய்த மழைநீர் அம்மண்ணின் தன்மையுடன் கலந்து விடுவதுபோல் காதலினால் முன்பின் அறியாத நெஞ்சங்கள் இணைந்து நிற்கின்றன என்பதைத் தமிழ் உள்ளங்களுக்குப் பகிர்கின்றது. உறவுகளுக்கு அப்பாற்பட்ட இரு உள்ளம் உறவுகளாக இணைவதை இப்பாடல் வெளிப்படுத்துகிறது.

**இன்புறுத்தல்**

ஓர் இலக்கியம் இன்பச் சுவையைப் புலப்படுத்துவது அடிப்படைப் பண்பாகக் கொண்டிருக்கும். அவ்விலக்கியம் உணர்த்தும் இன்ப உணர்வினைப் படிப்பவரும் அங்ஙனமே உணரும் வண்ணம் ஓர் இலக்கியம் திகழுமேயானால் அது இன்புறுத்தல் பண்பைக் கொண்டு திகழுகிறது எனலாம்.

அகப்பாடல்கள் காதல் தொடர்பான நிகழ்ச்சிகளைச் சித்திரிப்பதையே நோக்கமாகக் கொண்டுள்ளன. ஆதலால் அதைப் படிப்பவர் தாமும் அவையுணர்த்தும் அகஉணர்வினை உணருவது இயல்பாக அமைந்து விடுகிறது. அக்கவிதைகளைப் படிப்பவரும், அக்கவிதை கூறும் நுட்பமான மன உணர்வினை அடையாளம் கண்டுகொள்ளும் விதமாக செய்யுட்கள் அமைந்துள்ளன. இந்நிலையிலே அகப்பாடல்கள் இன்பம் நல்குவனவாய் அமைந்துள்ளன.

**"..................................................................**
**நெய்பெய் தீம்பால் பெய்து இனிது வளர்ப்ப**
**நும்மினும் சிறந்தது நுவ்வை ஆகுமென்று**
**அன்னை கூறினள் புன்னையது நலனே**

**அம்ம நாணுதும் நும்மொடு நகையே**
**விருந்தின் பாணர் விண்இசை கடுப்ப**
**வலம்புரி வான்கோடு நரலும் இலங்குநீர்த்**
**துறைகெழு கொண்க! நீ நல்கின்**
**இறைபடு நீழல் பிறவுமார் உளவே" (நற்றிணை, 172)**

என்ற இப்பாடலில், தன் அன்னை, புன்னை மரத்தைத் தமக்கை என்று கூறியதால் அம்மரத்தருகே தலைவனுடன் சேர்ந்திருக்கத் தலைவி நாணுகின்றாள். இவ்வாறு இப்பாடலில், ஓரறிவுயிர்களிடத்தும் அன்பு செலுத்தும் உணர்வும் புன்னை மரத்தைத் தன் தமக்கையாகக் கருதித் தலைவனுடன் கூடி இருக்க நாணும் நாகரிக மனப்பான்மையும் சுட்டப்படுகின்றன. இதில் தலைவி தனது இன்ப நாட்டத்தைத் தலைவனிடம் மறைமுகமாக வெளிப்படுத்துகிறாள். புன்னை மரத்தை முன்வைத்து தலைவனிடம் தனது அக உணர்வை வெளிப்படுத்துகிறாள்.

அகப்பாடல்களில், தலைவன் தலைவியிடையே நிகழும் இயற்கைப் புணர்ச்சி போன்ற நிகழ்ச்சிகளும் பேசப்படுகின்றன.

**"யான் நயந்து உறைவோள் தேம்பாய் கூந்தல்**
**வளம்கெழு சோழர் உறந்தைப் பெருந்துறை**
**நுண்மணல் அறல் வளர்ந்தன்ன**
**நல்நெறியவ்வே நறுந் தண்ணியவே" (குறுந்தொகை, 116)**

என்ற இப்பாடல் புணர்ந்து நீங்கும் தலைவன் தன் நெஞ்சிற்குச் சொல்லியதாய் அமைந்துள்ளது.

**"இல்லோன் இன்பம் காமுற்றாங்கு**
**அரிது வேட்டனையால் நெஞ்சே காதலி**
**நல்லன் ஆகுதல் அரிந்தாங்கு**
**அரிவன் ஆகுதல் அறியா தோயே" (குறுந்தொகை, 120)**

என்று இப்பாடல் புணர்ந்த தலைமகன் பிரிந்தவழி கலங்கிக் கூறியதாய் அமைந்துள்ளது.

**தோழியும் - இன்பவியலும்**

அக இலக்கியத்தில் இன்றியமையாமல் இடம்பெறுபவள் தோழி. அகத்திணை மாந்தர்களுள் தோழிக்கெனத் தனிச் சிறப்பாடம் உண்டு. களவு, கற்பு எனும் இரு நிலைகளிலும் பெரும்பங்கு ஏற்பவள் தோழி. தலைவியின் விளையாட்டுப் பருவத்திலிருந்து தோழியாக இருந்து மகப்பேறு நிலையில் செவிலியாக மாறுகிறாள். செவிலியின் மகள்தான் தோழி என்பதை,

**"தோழி தானே செவிலி மகளே" (தொல். களவியல், 35)**

என்கிறார் தொல்காப்பியர். தலைவன் தலைவியரிடையே அரும்பும் காதல் மலர்ந்து காய்த்துக் கனிவதற்குத் தோழி உறுதுணையாகிறாள். தலைவனும் தலைவியும் செல்வ நிலையில் ஓங்கி நிற்கும்போது தோழி, சொல், செயல் ஆகியவற்றை அவர்களுக்கு உணர்த்துகிறாள்.

தலைவியின் வாழ்வில் தோழியின் பங்கு முக்கியமானது. தலைவியும் தோழியும் உயிர்பகுத்தன்ன மாண்பின், உயிர் 'ஓர்' அன்ன செயர்தீர் நட்பினர், இன்னுயிரன்னர், சிறுவயதிலிருந்தே உடன் விளையாடும் நட்பு. தலைவியின் முகம் மலரும் போதுதான் தோழியின் இதயமும் மலரும். தலைவன் வினைமுடித்து வரும்போதும் வரைவு மேற்கொள்ளும் போதும் வரைந்த பிறகும் அவள் மகிழ்ச்சியில் திளைக்கிறாள். தலைவிக்காக அச்சம், மடம், நாணம் ஆகிய பண்புகளில் தலைவன் தோழியின் துணையொடு களவை நீட்டிக்க நினைக்கிறாள். தலைவனின் இச்செயல் குறையுறுதல் என்றும், தலைவியின் இசைவு குறைநேர்தல் என்றும், தோழியின்

துணைநலம் குறைநயப்பித்தல் என்றும் கூறப்படுகிறது. தலைவிக்கு இருக்கும் ஏக்கத்தைத் தான் உணர்ந்து கொண்டதைத் தலைவிக்குக் கூறுகிறாள் தோழி.

**“காமம் செப்ப நாணின்று கொல்லோ” (அகநானூறு, 330)**

எனத் தோழி கேட்கும் வினாவில் தலைவனிடம் கொண்ட காமத்தைக் கூறுவதற்கு நாணி நிற்பதை விளக்குகிறாள்.

பெண்ணின் இதயம் ஆணின் அன்பையே நம்பி வாழ வேண்டும் என்று கட்டமைகிறது. தலைவன் பொருள் ஈட்ட பிரியும்போது தலைவியைவிட பொருள் முக்கியமா? என்ற வினாவினை தோழி எழுப்புகிறாள். தலைவியின் உள்ளத்தை நுட்பமாக உணர்ந்து பேசும் திறன் கொண்டவளாகத் தோழி அக இலக்கியத்தில் கட்டமைந்துள்ளாள்.

தலைவியை நாள்தோறும் காண இயலாவிடில் தலைவனால் அப்பிரிவைத் தாங்கவியலாது. அவ்வாறு ஏற்படும் பிரிவுதான் தலைவியை மணம் செய்வதற்கு வகை செய்யும். எனவே தலைவியை எளிதில் காண்பதற்கு இயலாத சூழ்நிலையைத் தோழி உருவாக்குகிறாள். அதனால் தலைவி பாதிக்கப்பட்டாலும் அவள் நல்வாழ்விற்காகக் காதலர்களிடையே பிரிவை ஏற்படுத்துகிறாள். இங்ஙனம் தலைவன், தலைவியின் உறவை வழுப்படுத்தி அவர்களின் வாழ்வை இன்பத்தை நோக்கி நகர்த்துபவளாகத் தோழி விளங்குகிறாள்.

தலைவன் பொருள்வயிற் பிரிந்தபோது தலைவிக்கு ஏற்படும் இன்னல்களை, உணர்வுகளைத் தோழிதான் தலைவனிடம் பக்குவமாய் எடுத்துக் கூறுகிறாள். தலைவனின் ஆற்றலைப் புகழ்ந்தும், தலைவியின் அவலம் வெளிப்படுமாறு உரைத்தும், இடத்திற்குத் தகுந்தவாறு பேசக்கூடியவளாகவும் தோழி படைக்கப்பட்டுள்ளாள்.

இன்றைய துன்பத்தைத் தனிப்பதற்கு மாற்றுவழியாக நாளைய இன்பத்தை நினைத்தல் சிறப்பு. இந்த மனப்பாங்கினைத் தோழி மேற்கொண்டு தலைவியின் துயரத்தை மாற்றுகிறாள். எதிர்காலத்தில் நிகழவிருக்கும் இன்பத்தினைக் கூறி தலைவியின் மனநிலையை மாற்றும் தோழியின் அனுபவமிக்க மனத்திறம் சங்க அகப் பாடல்களில் புலப்படுகின்றது.

அக இலக்கியங்கள் காட்டும் தலைவன் தன்னிகரில்லா தலைமையுடையவன். பழிக்கும் பாவத்திற்கும் அஞ்சும் தன்மையுடையவனாகவும், அறிவுடையவனாகவும் ஆண்மகனுக்கு இலக்கணம் காட்டுவர் தொல்காப்பியர். இதனை,

**“பெருமையும் உரனும் ஆடூஉ மேன” (தொல். பொருள். களவு. 7)**

என்னும் நூற்பா சுட்டும். இதனை,

**“மகன் என்ற சொல் வெறும் ஆண்மகனை மாத்திரம் குறிக்கும் சொல் அன்று. நல்லூழின் பெருக்கால் எய்தலாகும் எல்லா உயர்வுகளும் ஒருங்கு வாய்க்கப்பெற்ற பெருந்தகையை மாட்டிலும் குறிப்பிடும் சொல் அது” (ந. சுப்பு ரெட்டியார், தொல்காப்பியம் காட்டும் வாழ்க்கை, ப. 57)**

என்று குறிப்பிடுவர் ந. சுப்பு ரெட்டியார். தலைவன் எஞ்ஞான்றும் முன்னோர் பொருளை வைத்து அதிலிருந்து இன்பத்தை அனுபவிக்காதவனாகவும் தன் உழைப்பிலிருந்து ஈட்டிய பொருளின் வழிதான் இன்பத்தை நுகரவேண்டும் என்ற கொள்கையுடையவனாகவும் தன் உழைப்பின் பயனை உறவினர்கள் அனுபவித்து அவர்களின் துன்பத்தைத் துடைக்கின்ற பேருள்ளம் படைத்தவனாகவும் காட்டப்படுகின்றான்.

**“தோழியை இரந்து பின் நிற்கும் தலைவன் இடித்துரைக்கும் பாங்கன் முன் மடல் வலித்த தலைவன், உடன்போகும் தலைவன், பிரிவு வலித்த தலைவன், இடைச்சுரத்து நின்ற தலைவன், பாசறைக்கண் தலைவன், வினைமுற்றி மீளும் தலைவன் எனப் பிரித்து அவன் செல்லும் சூழலை வகைப்படுத்திக் காட்டுவர்” (அ. இராமகிருஷ்ணன், அகமாந்தர்களும் கூற்றுகளும், ப. 67)**

இத்தகைய தலைவன் மனவலிமை, உறுதி, காக்கும் திறன், பொருளீட்டும் குணம், குடும்பத்தைப் பேணுதல் முதலிய பண்புகளோடு விளங்கினான் என்று அகநானூறு எடுத்துரைக்கிறது.

**தலைவனின் கோட்பாடுகள்**

அகத்திணை காட்டும் தலைவன் கல்வி அறிவு, ஒழக்கங்களால் சிறந்தவன். வழிவழியே வரும் உயர்குடியில் பிறந்தவன். இவனும் தலைவியும் சிறந்த நட்பினை உடையவர்கள். தலைவன்தான் தலைவியின் உள்ளக்குறிப்பை அறிந்து தன் காதலை வெளிப்படுத்துபவனாக உள்ளான்.

நெல்லும் உப்பும் நேரேயாகும் என்று சேரி தோறும் பேசுகின்ற ஒரு பெண்ணிடம் உன் உடம்பிலுள்ள உப்பின் விலை அறிந்திலமே என்று வினவுகின்றான். தலைவியின் பதில் அவனது உள்ளக் குறிப்பிற்கேற்ப முறுவலாகின்றது.

தலைவி வில்லைப்போல் செய்யப்பட்ட காற்சிலம்பை அணிந்து கொண்டு இரவுக்குறியில் வந்து நிற்க அஞ்சினாள். அவளைக்கண்ட தலைவன் இவள் முயங்கிப் பெயர்கின்ற கற்பில் சிறந்த பெண்ணோ அல்லது கயிர மலைச்சாரலில் உறையும் அணங்கோ என்று என்நெஞ்சம் அஞ்சுவதாக பேசுகின்றதை,

**"கவிரம் பெயரிய உருகெழ கவாஅன்**
**நேர்மலர் நிறை சுனை உறையும்**
**சூர்மகள் மாதோ என்னும் என்நெஞ்சே" (அகநானூறு, 198: 15-17)**

என்னும் அடிகளால் அறியலாம். இதில் சூரர மகளிருள் ஒருத்தியாகத் தலைவியை தலைவன் எண்ணுகின்றதை அறிய முடிகிறது.

**தலைவி வீட்டிற்குத் தொண்டு செய்தல்**

காதல் நோய் கொண்ட தலைவன் தலைவியின் வீட்டில் தொண்டு செய்தேனும் அவளை மணக்க விரும்பினான் என்று அகநானூறு சுட்டியுள்ளது. சிறந்த பொருட்களை எல்லாம் மரக்கலம் நிறைய கொண்டு வந்து விலையாகக் கொடுத்தாலும் கூட பெறுவதற்கு அரியவள் தலைவி. எனவே உப்புப் பாத்திகளில் அவள் தந்தைக்காகப் பணிசெய்து வருந்தியும், புணையொடு புகுந்தும், அவன் மயமாகியும் அவனைப் பணிந்தும், அவனைச் சார்ந்தும் இருந்தால் அவளைத் தமக்குத் தருவான் என எண்ணுகின்றான் தலைவன். இதனை,

**"……………. ஆய்தொடிக் குறுமகள்**
**நலம்சால் விழுப்பொருள் கலம்நிறை கொடுப்பினும்**
**பெறலருங் குரையன் ஆயின் அறம் தெரிந்து" (அகநானூறு, 280: 4-6)**

என்னும் அடிகளால் அறியலாம். இதில் தலைவன் தான் விரும்பியதைப் பெற வேண்டும் என்ற இன்ப நாட்டத்தை வெளிப்படுத்துகிறது.

**தலைவி கூற்றும் கோட்பாடுகளும்**

அகத்திணை மாந்தர்களில் தலைவனுக்கு உறுதுணையாக வருபவள் தலைவி. இவள் விழத்தி, மனையோள் என்னும் பெயர்களால் சுட்டப்படுகிறாள். சங்க இலக்கிய அகத்திணைப்பாடல்களில் தலைவி கூற்றுப்பாடல்கள் பெரும்பாலும் அவளது உள்ளுணர்வைப் புலப்படுத்துவதாக அமைந்துள்ளன. அகநானூற்றில் தலைவியின் மனநிலை தலைவனின் மீது காட்டப்படுகிறது. தனக்குத் துணையாக வருகின்ற தோழியிடத்தில் தலைவனைப் பற்றிய எண்ணத்தையே வெளிப்படுத்துவதைப் புலவர்களின் பாடல்கள் காட்டுகின்றன.

**"அகமாந்தர்களுள் தலைமை தலைவிக்கே என்றும் பிறமாந்தர்கள் தலைவி வழிப்பட்டவர்களே என்றும் தலைவியின் பண்புகளுள் முதலாவது கற்புடைத் திண்மையே என்றும்**

**பிற பண்புகள் கற்பினைச் சார்ந்து பொலிவன என்றும் நாம் தெளிய வேண்டும்" (தமிழ்க் காதல், ப. 31)**

என்பார் டாக்டர் வ.சுப. மாணிக்கம்.

**"திருமணத்திற்கு முன்பும் (களவியல் வாழ்வு), திருமணத்திற்குப் பின்பும் (கற்பியல் வாழ்வு) தனித்த முறையில் தலையாய பண்பு நலன்களைக் கொண்டவள் அகப்பொருள் பாடல்களில் இடம்பெறும் தலைவி ஆவாள். எல்லா நிலைகளிலும் அன்பு நலம் கனியப்பெற்ற அவள் வாழ்வே தலைவியைத் தன்னிகரற்றவளாக்குகிறது" (அகப்பாடல்களில் தலைவி, ப. 7)**

என்று தலைவியின் சிறப்பை எடுத்துரைப்பார் ஈ.கோ. பாஸ்கரதாஸ். மேற்குறித்த விளக்கங்களில் இருந்து தலைவியின் பண்புநலன்களை அறிய முடிகிறது.

**தலைவனை வாழ்த்தும் பண்பு**

பெண்கள் தான் எத்தகைய துயரை அடைந்தாலும், தன் தலைவன் நலம்பெற்று வாழ வேண்டும் என்று எண்ணும் வழக்கம் இருப்பதைக் காணமுடிகிறது. சங்க இலக்கிய தலைவியும் இவ்வெண்ணம் கொண்டவள் என்பதனைத் தலைவியின் கூற்றின் மூலம் உணரமுடிகிறது. "குற்றம் சிறிதும் இல்லாதவராக இருப்பினும் அவர்கள் மீதும் குற்றமேற்றிப் பலரிடமும் சென்று புறங்கூறித் திரியும் இன்னாச் சொல்லை உடைய கொடிதறி மகளிர் என்னை இகழினும் இகழட்டும். என் அழகு ஒழியினும் ஒழியட்டும்இ எம் காதலர் என்றும் நோயற்றவராக சிறந்து வாழட்டும்" என்று வாழ்த்தும் மனம் கொண்ட தலைவி புறங்கூறும் பெண்கள் இருக்கும் ஊரை நல்லோர் வாழ்தற்கு அஞ்சுகின்ற மூதூர் எனக் குறிப்பிடுகின்றாள் தலைவி. இதனை,

**"அழியா விழவின் அஞ்சுவரு மூதூர்ப்**
**பழியிலர் ஆயினும் பலர்புறங் கூறும்**
**அம்பல் ஒழுக்கமும் ஆகிய வெஞ்சொற்**
**சேரியம் பெண்டிர் எள்ளினும் எள்ளுக" (அகநானூறு, 115: 1-4)**

என்ற பாடல்வழி இல்லற வாழ்விற்கு இன்றியமையாத உயரிய விழுமியம் வெளிப்படுதலைக் காணமுடிகிறது.

**முடிவுரை**

தலைவன், தலைவி இருவரும் இன்பவியலுக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்துள்ளதை அறியமுடிகிறது.காதல்வயப்பட்ட தலைவன், தலைவி திருமணத்திற்கு முன்பு துன்பப்பட்டாலும் அவர்கள் திருமணத்திற்குப் பின்னான இன்ப வாழ்வை எண்ணி துன்பத்தையும் இன்பமாக அனுகியிருப்பதைக் காணமுடிகிறது. பெண்கள் தான் எத்தகைய துயரை அடைந்தாலும், தன் தலைவன் நலம்பெற்று வாழ வேண்டும் என்று எண்ணும் வழக்கம் இருப்பதைக் காணமுடிகிறது. சங்க இலக்கிய தலைவியும் இவ்வெண்ணம் கொண்டவள் என்பதனைத் தலைவியின் கூற்றின் மூலம் உணரமுடிகிறது

**துணைநின்ற நூல்கள்**

1. இராமகிருஷ்ணன், அ., அகமாந்தர்களும் கூற்றுகளும், சந்தியா பதிப்பகம், சென்னை, முதல் பதிப்பு, 2007.
2. சுப்பு ரெட்டியார், ந., தொல்காப்பியம் காட்டும் வாழ்க்கை, சந்தியா பதிப்பகம், சென்னை, முதல் பதிப்பு, 2011.
3. தொல்காப்பியர், தொல்காப்பியம் (இளம்பூரணனார் உரை), சாரதா பதிப்பகம், சென்னை, 11ஆம் பதிப்பு, 2011.

4. பாஸ்கரதாஸ், ஈ.கோ., அகப்பாடல்களில் தலைவி, சாரதா பதிப்பகம், சென்னை, முதல் பதிப்பு, 2009
5. மாணிக்கனார், வ.சுப., தமிழ்க் காதல், சாரதா பதிப்பகம், சென்னை , 3ஆம் பதிப்பு 2010.
6. ........, அகநானூறு (புலியூர் கேசிகன் உரை), சாரதா பதிப்பகம், சென்னை, முதல் பதிப்பு, 2010.
7. ......., குறுந்தொகை (புலியூர் கேசிகன் உரை), சரண் புக்ஸ், சென்னை, முதல் பதிப்பு, 2021.
8. ........, (2003). நற்றிணை (துரைசாமிப் பிள்ளை. ஔவை. சு - உரை), சாரதா பதிப்பகம், சென்னை முதல் பதிப்பு, 2003


**References**


1. Ramakrishnan. A.,Agamaandhargalum Kootrugalum (First Edition), Sandhiya Padhippagam, Chennai, 2007
2. Subbu Reddyar. N, Tholkappiyam Kaattum Vaazhkkai, Sandhiya Padhippagam, Chennai, 2011.
3. Tholkappiyar, Tholkappiyam (Ilampooranar Urai), Saradha Padhippagam, Chennai, 11th Edition 2011.
4. Baskaradoss. E.G., Agappaadalgalil Thalaivi, Saradha Padhippagam, Chennai, First Edition, 2009.
5. Maanikkanaar, Va.Suba. Thamizh kadhal, Saradha Padhippagam, Chennai, 3rd Edition, 2010.
6. ………….. Aganaanooru, Puliyoor kesigan urai, Saradha Padhippagam, Chennai, 1st Edition, 2010.
7. ………….. Kurunthogai, Puliyoor kesigan urai, Saradha Padhippagam, Chennai, 1st Edition, 2010
8. ……………, Natrinai, Avvai su. Duaraisamy pillai urai, Saradha Padhippagam, Chennai, 1st Edition, 2003


**தமிழில் இக்கட்டுரையின் மேற்கோள்**


**லெனின்குமார். ச "செவ்வியல் இலக்கியங்களில் இன்பவியல் கோட்பாடுகள்"** புலம் : பன்னாட்டுத் தமிழியல் ஆய்விதழ், தொகுதி 3, இதழ் 1, சனவரி 2023, பக். 28-34


**Cite this Article in English**


**Leninkumar. S " Theories of Hedonism in Classical Literature"** Pulam: International Journal of Tamilology Studies, Vol.3 Issue 1, January 2023, pp. 28-34